
டி.ஜி.ஆர் பிக்சர்ஸ்
இவன் அவனேதான்
தயாரிப்பு
டி.ஜி.ராஜ்
டைரக்ஷன்.. பி.ஸ்ரீதர்

T. G. R. பிக்சர்ஸ்

அளிக்கும்

# "இவன் அவனேதான்"

நடிகர்கள் :

| | | |
|---|---|---|
| உதயகுமார் | .... | முத்து, டாக்டர் மோகன் |
| S. V. சகஸ்ரநாமம் | .... | சுந்தர் |
| K. சாரங்கபாணி | .... | டாக்டர் குணபூஷணம் |
| A. K. வீராசாமி | .... | ஆறுமுகம் |

மற்றும்

A. N. கிருஷ்ணன், பிரபாகர், சந்திரன், ரணதீர்.

நடிகைகள் :

| | | |
|---|---|---|
| அம்பிகா | .... | மாலினி |
| பண்டரிபாய் | .... | லக்ஷ்மி |
| தேவிகா | .... | பிரேமா |
| S. N. லட்சுமி | .... | மீனாக்ஷி |
| பேபி உமா | .... | கண்ணம்மா |

பாடல்கள் :

தஞ்சை ராமையதாஸ், M. S. சுப்பிரமணியம், கவிஞர் வில்லிபுத்தன், கோவை சபாபதி & கலைப்பித்தன்.

பின்னணி பாடியவர்கள் :

சீர்காழி கோவிந்தராஜன், திருச்சி லோகநாதன், S. C. கிருஷ்ணன், P. B. சீனிவாசன், P. லீலா, M. S. ராஜேஸ்வரி, S. ஜானகி & நித்யகலா.

# இவன் அவனேதான்

## கதையின் உயிரோட்டத்தில் கதாபாத்திரங்கள்

**முத்து**

நான் ஒரு பட்டிக்காட்டான்...எனக்கு நாகரீகம் என்பது தெரியாதுங்க. ஆனா எனக்கு ஒரு அத்தை பொண்ணு இருக்கு பாருங்க அதோட அழகை கோயில் கட்டிவைச்சுதாங்க கும்புடனும்! அதை என் மனசார காதலிக்கிறேன். ஆனா, அது என்னை எப்ப பாத்தாலும் பட்டிக்காட்டு பயல்னு சுதா திட்டுது! வெறுக்குது விரட்டுது. அதுக்காக அத்தை பொண்ணை மறந்துட முடியுங்களா! என் மனசிலே உள்ளதை அப்பாகிட்ட சொன்னேன். அவரும் தங்கை மகங்கிற உரிமையோட போய் பொண்ணு கேட்டாரு. பிரயோசனம் இல்ல! அந்தக் கோவத்திலே எனக்கு வேற ஒரு பட்டிக்காட்டு பொண்ணை கல்யாணம் பண்ணிவைக்க முடிவு பண்ணிட்டாரு நான் பைத்தியகாரனா மாறிட்டேன். என் பைத்தியம் தெளியுங்களா ?

**மாலினி**

திரண்ட சொத்து இருக்கு. அப்பா இல்லாத குறையை நீக்கி என் தாய் என்னை அன்போடு வளர்த்து படிக்க வைத்தாள். நாகரீகம் என்றால் என் உயிர். இடையிலே எவனோ மாமன் மகன்னு உரிமை கொண்டாடி ஒரு பட்டிக் காட்டான் வந்தான். அவனுக்கு எம்மேலே காதலாம்! பைத்தியக்காரன் அவனைப் பார்த்தாலே அருவருப்பா இருக்கு....பக்கத்து வீட்டு சுந்தர் ஒரு நாடக பார்ட்டி வைச்சிருக்காரு. என்னோட அழகுக்கு நாடகத்திலே நடிச்சா வருங்காலத்திலே பெரிய ஸ்டாராவேன்னு புகழ்ந் தாரு. நானும் அந்த கலைக்கு மதிப்பு கொடுக்க நடிகையா மாறினேன்! அந்த கலையின் மூலம் பாரின் ரிட்டன் மோகன் எனக்கு காதலனாக கிடைத்தார். அம்மாகூட பெருமைபட்டு திருமண ஏற்பாடு செய்தாள். ஆனால் நல்லவராக இருந்த சுந்தர் இந்த திருமணத்தின் மூலம் துரோகியாக மாறிவிட்டார். எனக்கு காரணம் புரியவில்லை. திருமணம் தடைபட்டுவிடுமோ என்று ஏங்குகிறேன்.

**சுந்தர்**

நான் ஒரு கலைஞன்! என் கலைக்கோயில் மண்டபத்தில் பல அழகு தெய்வங்களை பூஜிக்க நினைத்தேன். அந்த விருப்பத்திற்கு எப்போதும் எதிரி என் மனைவி! அவளை

சமாதானப்படுத்துவதே என் வாழ்க்கையில் ஒரு கலை யாகப்போய்விட்டது. என் இலட்சியமெல்லாம் மாலினி யின் அழகை ரசிக்கவும் அவளின் திரண்ட செல்வங்களுக்கு அதிபதியாக வேண்டும் என்பதுதான். அதன் காரண மாக மாலினிக்கு கலை போதை ஊட்டினேன்! அவளும் மயங்கி என் வலையில் விழும் சமயம். எங்கிருந்தோ வந்த இனந்தெரியாத மோகன் மாலினியை மயக்கி திருமணம் வரை போய்விட்டான்! ஒன்று, அவன் திருமணம் நடக்கக் கூடாது அதுதான் என் இலட்சியம்.

இலட்சுமி

பெண் ஜென்மமே உலகில் ஒரு புண் ஜென்மம் என்று பழமொழி. அது என்வரைக்கும் உண்மைதான். என் கணவரை நான் தெய்வமாக பூஜிக்கிறேன். ஆனல் அவரோ என் எதிரில் கலையின் பெயரால் வேறு பெண்களிடம் தன் மனதை பறிகொடுக்கிருர். அதை என்னுல் எப்படி தாங்க முடியும். அதையும் என் நெஞ்சின் அடித் தளத்தில் அமைதியாக புதைத்து வைத்துக்கொண்டுதான் இருக் கிறேன். ஆனல் அவர் மனமோ கல்லினும் வலியதாக இருக்கிறது. என்ருவது ஒரு நாள் என் கணவர் திருந்து வார் என்ற நம்பிக்கையோடு நானும் நடைப்பிணமாக வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறேன்.

பிரேமா

நான் ஒரு அனதை. என்னை ஒரு சிறந்த நடிகை யாக்கி கலைவானில் மின்ன செய்கிறேன் என்று புகழ் மொழி பேசி ஏமாற்றி விட்டார் சுந்தர். ஒரு பெண்ணுக்கு வேண்டிய உயிர் நாடி மானம். அது பறிபோய்விட்டால் நான் வாழ முடியுமா, இல்லை வாழ தகுதிதான் இருக் கிறதா ?

டாக்டர் குணபூஷணம்

நான் ஒரு டாக்டர். எங்கிட்ட வர்ர பேஷண்ட்கள் ஒவ்வொன்னும் ஒவ்வொரு டைப். என்னுடை டிஸ்பன் ஸரிக்கு முத்து, மாலினி, சுந்தர், இலட்சுமி, பிரேமா, மோகன் எல்லோரும் அட்மிட் ஆனுங்க. அவங்க எல்லா ருடைய மன வியாதியை கவனிச்சி நான் ஸ்டெடி பண்ணி அஹிம்சைங்கிற மருந்துலே எல்லாருக்கும் ஒவ்வொரு டோஸ் கொடுத்தேன். அவங்களும் குடிச்சாங்க. அந்த பேஷண்ட் வியாதிகள் எப்படி குணமாகுதுன்னு நான் சொல்லபடாது. ஏன்ன வெள்ளித்திரை உங்களுக்கு சொல்ல காத்திருக்கு. போய் பாருங்க!

—:)(:—

## பாடல்கள்

### 1

இயற்றியவர் :
தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர்கள் :
பி. லீலா &
P. B. சீனிவாசன்

பெண் : தேவி ஜெகன் மாதா !
உந்தன் திருவுள்ளம் இரங்காதா
சரண் புகுந்திட மலர் பதம்—அருள்
காவியக் கலையே
கனிந்திடும் நிலையே
வாழ்வினில் ஒளிவீசும்
வளர்மாமதி, வனிதாமணி, மறவேன்யினி
(தேவி)

ஆண் : காட்டுப் பூச்சிபோல—நீ வீட்டுக்குள் தன்னுலே
கலிகாலத்திலும் கண்டிரியாக வாழ்வதும்
பிடிக்கலே
நாகரீகமில்லா கர்நாடகி
காலம் தெரிஞ்சு நைலான் சேலை கட்டணும்

பெண் : ஐய்யோ கண்ணுடி போல் உடம்பை ஏன்ங்க
காட்டணும்

ஆண் : குதிரை லாடம் போல ஷூவை மாட்டணும்

பெண் : எதுக்கு குதிச்சு, குதிச்சு வழுக்கி விழுந்து
காட்டணும்

ஆண் : சாட்டை போல ரெட்டை சடை போடணும்

பெண் : தமிழ் நாட்டின் பண்பை எதுக்கு இப்படிக்
கெடுக்கணும்

ஆண் : கண்ணுக் கேத்த மையி
கையிக் கேத்த பையி
கருப்புக்கேத்த டையி—வெளியே
காட்டிடாமே வையி—கணவன்
ஆர்டர் போல செயி

பெண் : கண்ணிலாடும் ஒரு பெண்ணைக் கண்டு
தினம் எண்ணி ஏங்கும் ராஜா—இந்த
வண்ண மாமயில் மின்னல் போல வந்து
மின்னும் காதல் ரோஜா—பாராய்
மாதரைக் கன்னி வைக்கும் ராஜா
அந்தசந்தமுன ஆரிதேரினு
சுந்தராங்கி னேரு

வசனம் : ஆஹா !...........

பெண் : பிரியுடா அந்துக் கோர நணு
ஆசை தீரக்கணு
விந்து லார. ரா. ரா—ஜோராய்
(கண்ணிலாடும்)

கல்சர்க்கி டைமன்கி
கண் போட்டுப் பாக்குருங்க ஹம்
கலி கால மைனர் ஜி
தலை யாட்டி ஏய்க்குருங்க

வசனம் : வா....ரே....வா

பெண் : ஹஜி ஆவோ ! ஆவோ !
டோபி வாலே
தும்கோ மேராம் சலாம் கை
நம்கி உம் மேல் குலாமுகை (ஆவோ)

தேகோ ! தேகோ !
கம் காதல் திவானு

வசனம் : வா....மேரா புல் புல்....

பெண் : தபலா டேக்காமே கானு பஜனு
தாளம் போடுருங்க பைஸா கஜனு

வசனம் : கியா கானு ! கியா கானு

பெண் : தாளம் போடுருங்க பைஸா கஜனு (ஆவோ)

பெண் : அப்டு டேட் பேஷன்
ஹனி மூன் சீசன்
ஹலோ மை டியர்
லவ்வுக்கேது ரேஷன்
ஹலோ மைடியர் ஹலோ

இயற்றியவர் : எம். எஸ். சுப்பிரமணியம்

பாடியவர் : திருச்சி லோகநாதன்

கண்ணே—அடி பெண்ணே
கடைக் கண்ணாலே என்னைப் பாரு—அடி
கட்டாணி முத்தே—கட்டிக் கரும்பே
நமக்கிணை யாரு—உன் அழகு பல் ஜோரு
அத்தை மகளே நான் உன் மேலாசை
வச்சேனே மானே
உன் நேச மச்சானும் நானே

மாலினி உன் படத்தைக் கண்டா மனசு சொக்குது
எம் மனசு சொக்குது
தேனே—அடி மானே தாலி கட்ட கையி துடிக்குது
மனமோகினி—மனம் மாறி நீ
என்னோடுல்லாசமாய் வாழ
வருவாய் பெண்ணே—இனி நான் பிரியேன் கண்ணே
(கண்ணே)

பட்டணத்துக் கட்டழகுக்காரி—சிங்காரி
உன் பகட்டு மயக்குதடி ஒய்யாரி
இங்கிலீஷ் படிச்ச பொண்ணே—நாகரீகமான கண்ணே
டாம்—இடியட்—ராசுகோலு என்று என்னைத் திட்டாதே
உன் மனசு கோணாமே நாயிகுட்டி போலிருப்பேன்
(பட்டணத்து)

வீதியிலே பந்தல்போட்டு
தோரண மரங்கள் கட்டி, மேளதாள பாண்டுவச்சு
ஊரு கோலம் போகலாம்
நாடறிய தாலி கட்டி
கண்ணாலம் கட்டிக்கிட்டு
ராஜா ராணி போல நாம் ஜோராய் இருக்கலாம்.
(பட்டணத்து)

பாக்கு வெத்தலை போட்டுக்கிட்டு பட்டணத்துக்கு போகலாம்

ஜோக்கு மஜாவாக காரிலேறி சுத்தலாம்

பீச்சிலே உக்காரலாம்—கரம் மசாலா கடலே சுண்டல்
சூடான முறுக்கு வறுவல் பட்டாணி வாங்கி தின்னலாம்
சினிமா பயாஸ் கோப்பு டிராமாவும் பாக்கலாம்
ரேடியோ பாட்டு மஜாவா நம்ம கேக்கலாம்
நல்லா கேக்கலாம்

வா. வா. வா. நீ வா. வா. வா.
ஜினுக்கு ஜிக்கா ஜிங்கா, ஜிக்கா
ஜினுக்கு ஜிக்கா ஜிங்கா, ஜிக்கா
ஜினுக்கு ஜிக்கா ஜிங்கா, ஜிக்கா—ரங்காடி
ஆ....த்....தாடி

## 3

இயற்றியவர் : பாடியவர் :
**கலேப்பித்தன்** **S. C. கிருஷ்ணன்**

செம்பட்டு வேட்டி கடடி
செவந்திப் பூமாலே போட்டு
செந்தூரப் பொட்டும் இட்டு
என் தங்கமே தங்கம்
சிங்காரப் புருஷனும் வந்தான்
வணக்கம்....வணக்கம்

அடேயப்பா மன்னுரு—உங்க
அய்யா என்ன சொன்னுரு

அதிசயத்தைப் பாத்தாரா—இந்த
ரகசியத்தைச் சொன்னுரா

கல்யாண ஊர்வலம் வரும்
உல்லாசமே தரும்

எழுந்து நான் ஓடிடுவேன்—ஆ....
எழுந்து நான் ஓடிடுவேன்
பைத்தியம் பேசுதடி—எந்தன்
பாரமும் பெருகுதடி—முகம்
கோரமாய் மாறுதடி—வந்து
நேரமும் ஆகுதடி

பேதமை கொண்டமாமா பிழைத்திட்டாய் இனிமேலிந்த
வீடினே நோக்கி நீயும் மீண்டுமே வந்திட்டாலே

சாடுவேன் உன்னை நானும் சடுதியில் இங்கு விட்டு
ஓடுவாய் உந்தன் உடல் புழுதியில் புரளுமுன்னே
ஆ...ஆ...ஆ ஆஹ் ஆளைக்கொஞ்சம் பாரு
ஏ....ஏ....ஏ நீ எங்கே வந்தே சொல்லு
இ...இ...இ இங் கின்னுமென்ன வேலை
சே...சே...சே சட் வீட்டை விட்டே ஓடு

கெஜல்

உள்ளொன்று புறமொன்று பேசியே
ஊரை ஏமாற்றி காரில் போகும் சீமானே
நேரில் இங்கு வந்த மர்ம மென்னவோ

பாட்டு

வாங்க மச்சான் வாங்க—வந்து
வாங்கிட்டு நீங்க போங்க
ஏங்கி, ஏங்கி நீங்க—ஏன்
இப்படி முழிக்கிறீங்க—சும்மா
வாங்க மச்சான்—ஜோரா
வாங்க மச்சான்—உள்ளே
வாங்க மச்சான்

## 4

இயற்றியவர் :
**எம். எஸ். சுப்பிரமணியம்**

பாடியவர்கள் :
**M. S. ராஜேஸ்வரி &**
**S. C. கிருஷ்ணன்**

எது நிஜம் எது பொய் சொல்லு—அண்ணு நீ
எது நிஜம் எது பொய் சொல்லு

**வசனம் :** சொல்றேன். இந்தா சொல்லிப்புட்டேன்
கல்யாணம் ஆனு பைத்தியம் போகும் (எது)

**வசனம் :** ஹூம்

பைத்தியம் போனு கல்யாணம் ஆகும்

**வசனம் :** ஆங் ஹூம் (எது)

பட்டிக் காட்டுப் பெண் உனக்குப் பிடிக்கலையா

**வசனம் :** ஹ்ூம் ஹ்ூம்
பட்டணத்துப் பெண்ணை இன்னும் மறக்கலையா

**வசனம் :** ஆஹா ! ஆஹா ! (பட்டணத்து)
காரியம் கை கூடாததினாலே கவலையால்
பைத்தியமா நீ
ஒரு காரிய பைத்தியமா

**வசனம் :** அய்யய்யோ அப்பாவுக்கு பைத்தியம், அண்ண
னுக்குப் பைத்தியம்
வைத்தியருக்குப் பைத்தியம் எல்லாருக்கும்
பைத்தியம்
உனக்குப் பெண் இனி யார் கொடுப்பாங்க
(எது)

**வசனம் :** ஹ்ூம் கொடுக்க மாட்டாங்களோ ?
எனக்கு அண்ணி யார் வருவாங்க

**வசனம் :** ம் நான் பைத்தியம் (உனக்கு)
மனம்விட்டு உள்ளத்தைச் சொல்லாது போனா
பைத்தியம் தெளிஞ்சிடுமா
மருந்தால் குணமும் ஆகிடுமா (எது)

## 5

இயற்றியவர் :
**கவிஞர் வில்லிபுத்தன்**

பாடியவர்கள் :
**திருச்சி லோகநாதன் &**
**S. ஜானகி**

**ஆண் :** வாழ்க்கையின் பாடம்
கூறிடும் ஓடம்
ஓடும் சிங்காரம்
பார் மாலை நேரம் !...(வாழ்க்கையின்)

**பெண் :** வாழ்க்கையின் பாடம்
கூறிடும் ஓடம்
ஓடும் சிங்காரம்
பார் மாலை நேரம் !

ஆண் : மாமலை வானை தேன் முத்தம் ஈந்து
மாசிலாக் காதல் பேசுதே சேர்ந்து

பெண் : மாமலை தேடும் வான் வெகு தூரம்
நாமதைக் காண ஏது ஆதாரம்? (வாழ்க்கை)

ஆண் : பூங்கொடி நீரைத் தழுவிடும் காட்சி
புதுமையைப் பார் இது—காதல் அத்தாட்சி

பெண் : கிளை கனத்தாலே நீரலை மேலே
வளையும் தன்னாலே பாரும் கண்ணாலே!
(வாழ்க்கை)

ஆண் : ம் :—

ஆண் : காதலின் தாபம் தணித்திட வேண்டி
கரைதனைத் தாவி வரும் அலை பாராய்!

பெண் : தென் திசைக் காற்றின் வேகத்தினாலே
திரை நதி மோதும் அது கரை மேலே!
(வாழ்க்கை)

ஆண் : பொன் வண்டு பூவை தாவியே ஓடி
புதுக் காதல் கீதம் பாடுதே நாடி

பெண் : தேனுண்ணும் வண்டு தான் பசிகொண்டு
பூமலர் கண்டு கத்துது மண்டு! (வாழ்க்கை)

## 6

இயற்றியவர் :
**கோவை சபாபதி**

பாடியவர் :
**S. ஜானகி**

தொகையறா

மாமுனியே !........மா தவமே
மணி முடி தரித்து மன்னனாய் வாழாமல்
முனிவராகித் தவம் செய்தல் முறைதானோ!

பாட்டு

கண் திறந்தே பாரும்
கனிவோடு வாரும்
கடுந்தவம் போதும்

ஏனிந்த மௌனம்
மாமுனியே! மாதவமே (கண் திறந்தே)
என் அழகு வெறும் கானலாகிப் போவதா
இளமையும் போனபின் வீணாகி நோவதா
என் சதங்கையின் தாளமும் ஓம்கார இசை நாதமும்
இணைவதே இன்பமாகும் வாழ்விலே
மாமுனியே! மாதவமே (கண்)
கண் திறந்தால் பேரின்பமிங்கு காணுமே
கண் மூடினால் அது கனவாகிப் போகுமே
இந்திர போகம் எனக்கிணை இல்லை
இனியிது போல வேற நேரமில்லை
மாமுனியே! மாதவமே (கண்)
இளகாத தேனோ
உணராத தேனோ
எனதாசை வீணோ
சரிதானோ
முறைதானோ
நெறிதானோ

## 7

இயற்றியவர்:
**கவிஞர் வில்லிபுத்தன்**

பாடியவர்கள்:
**P. B. சீனிவாசன் &**
**S. ஜானகி**

**பெண்:** இன்ப எல்லை காணும் நேரம்
இனிக்கும் மாலை சோலையோரம்
அன்பு கொண்டு தென்றல் வந்து
உறவாடுதே—நெஞ்சம்
ஊஞ்சலாடுதே! (இன்ப)

**ஆண்:** இன்ப எல்லை காணும் நேரம்
இனிக்கும் மாலை சோலையோரம்
அன்பு கொண்டு தென்றல் வந்து
உறவாடுதே—நெஞ்சம்
ஊஞ்சலாடுதே!

பெண் : இள மாலை நேரம் மலைவானம் சேர்ந்து
களிப்போடு பேசும் கதை என்னவோ ?

ஆண் : கலையான காதல் நிலையானதென்று
அவை பேசும் உண்மைக் கதை தானது !

[இன்ப]

ஆண் : பூவோடு கொஞ்சம் பூங்கொடி நீரில்
புதுப்பாடம் கேட்கும் முறை என்னவோ ?

பெண் : விழியோடு சேரும் ஒளி போல வாழ்வின்
சுகம் காணக் கேட்கும் வழிதானது ! [இன்ப]

பெண் : ஆடிடும் நீரலை கரைதனைத் தீண்டி
ஆனந்தம் தேடும் நிலை என்னவோ !

ஆண் : கரையது காணும் காதலின் தாபம்
வேதனை தீர்க்க அலை தீண்டுதே ! [இன்ப]

ஆண் : மலரோடு பேசி விளையாடும் வண்டு
ஏதற்காகச் சென்று கவி பாடுது ?

பெண் : அலை மோதும் காதல் பசி தீர வேண்டி
அழகான வண்டு இசை பாடுதே !

## 8

இயற்றியவர் : பாடியவர் :

**எம். எஸ். சுப்பிரமணியம் சீர்காழி கோவிந்தராஜன்**

தொகையரு

பெண் என்றால் பேயும் மனம் இரங்குமன்றோ
பேதை இவள் நாதனின் மனம் இரங்காத தேனோ

பல்லவி

கல் நெஞ்சமா ! இவள் மேல் வஞ்சமா !
பெண் பேதை படும் சோகம் தான் கொஞ்சமா-அந்தோ
இது நியாயமா [கல் நெஞ்சமா]

வதை செய்யும் பாவம் வீண் போகுமா
துயராலே வாடும் மனம் மாறுமா—பெண்
அனுதினமும் கண்ணீர் சிந்தும் கலிதீருமா-அந்தோ
[கல் நெஞ்சமா]

புவி வாழ்வின் ஆனந்தம் புயலானதோ
மன ஆவல் யாவும் கனவானதோ-நின் [புவி]

விதிவிளையாட இல்வாழ்வும் இருளானதோ
நின் பிரேமையெல்லாம் வீண் போனதோ [விதி]

பதி சேவைக்கு நீ காணும் பலன் தானிதோ-அந்தோ
இது நியாயமா

## 9

இயற்றியவர் : பாடியவர் :
**எம். எஸ். சுப்பிரமணியம்** **S. ஜானகி**

ஹேப்பி ஜாலி குட் டே—சுப
வாழ்வு பொங்கும் நாளே—மை
டார்லிங் கண்ணாளன் என் வாழ்வில்
கூடும் நாளே [ஹேப்பி]

ஆசைக் கனவும் நினைவாய்—நிஜம்
ஆகிடுமே மிக இனிதாய்
புவி மீதில் பாவை செய்த மகா பாக்கியமே
எந்தன் மகா பாக்கியமே
மன மகிழ்வாலே அவர் உறவாலே
இனி என்றும் இன்பம் காண்பேன் ]ஹேப்பி]

அத்தை மகள் மேல் உரிமை—மாமன்
மகனுக்குண் டென்றாலே—அவன்
கன்ட்ரிப்ரூட் ஆனாலும் மணந்திடவோ
நான் மணந்திடவோ
பெண் உரிமையினால், என் மனம் போல் நான்
நவயுவனை நான் அடைந்தேன்
லண்டன் ரிடர்ண்ட் டாக்டர்—என்
வாழ்வில் ஹீரோ ஆக்டர்
மணமாலை சூட்டி என்னை மணந்திடுவார்
மோகன் மணந்திடுவார்.
என் ஜீவிதமே மிக ஆனந்தமே
கல்யாண வைபவ மிதே [ஹேப்பி]

| | | |
|---|---|---|
| கதை | ... | ராஷ்மி, B.A. |
| வசனம் | ... | கலைப்பித்தன் |
| இசையமைப்பு | ... | M. ரங்காராவ் |
| ஒளிப்பதிவு | ... | T. V. பாலு |
| ஒலிப்பதிவு (Director) | ... | A. கிருஷ்ணன், B.A., |
| ஒலிப்பதிவு | ... | A. V. பார்த்தசாரதி |
| எடிட்டிங் | ... | G. வெங்கட்ராமன் |
| மேக்கப் | ... | R. M. மாணிக்கம் |
| ஆர்ட் டைரக்டர் | ... | P. N. மேனன் |
| காஸ்ட்யூம் | ... | Y. வெங்கட ராவ் |
| டான்ஸ் டைரக்டர் | ... | C. ராமமூர்த்தி |
| நியூஸ் சர்வீஸ் | ... | P. G. ஆனந்தன் |
| லைட்டிங் எலக்டிரிஷன் | ... | M. சங்கரநாராயண் |
| ஸ்டில்ஸ் | ... | பட்டாராம்ஸ் போட்டோ சர்வீஸ் |
| பிராஸஸிங் | ... | விஜயா லாபரட்டரி |
| ஸ்டுடியோ | ... | விஜயா & வாஹினி |
| உதவி டைரக்ஷன் & உதவி வசனம் | ... | S. R. லெட்சுமணன் |

தயாரிப்பு :

## T. G. ராஜ்

டைரக்ஷன் :

## P. ஸ்ரீதர்




டி. ஜி. ஆர் பிக்சர்ஸ்

# இவன் அவனேதான்

தயாரிப்பு... டி. ஜி ராஜ் டைரக்ஷன் பி. ஸ்ரீதர்

P.N MENON